மா.கா.ஆணை எண். 667 /2021
ந.க.எண். அ3/13111/2020

மாநகர காவல் அலுவலகம்,
திருச்சி மாநகரம்.

நாள். 29.07.2021.

இளநிலை உதவியாளர் பணிவரன் முறை ஆணை

பொருள் : பணியமைப்பு - திருச்சி மாநகரம் - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் பணிநியமனம் பெற்ற செல்வி. M. முத்துலெட்சுமி என்பவரது பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை: செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடிதம் எண். 2458/PSD-1/2020, நாள். 28.05.2020.

2. தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண். 550316/NGB 2(2)/2020, நாள். 05.08.2020.

3. இவ்வலுவலக ஆணை எண். 505/2020, ந.க.எண்: அ3/13111/2020 இதே நாள். 11.08.2020.

# # # #

பார்வை 1 -ல் காணும் செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை ஆணையின்படி 2018-2019 மற்றும் 2019-2020-ம் ஆண்டிற்கான குரூப் 4 தேர்வில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற்று (பதிவு எண். 1004015115), பார்வை 2-ல் காணும் தலைமையலுவலக குறிப்பாணை மூலம் இளநிலை உதவியாளராக பணிநியமனம் பெற்று திருச்சி மாநகர காவல் அலுவலகத்தில் 21.08.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வரும் செல்வி. M. முத்துலெட்சுமி என்பவரது பணியினை அவர் பணிக்கு அறிக்கை செய்த நாளான 21.08.2020 முற்பகல் முதற்கொண்டு அவரது உடற்தகுதிக்குட்பட்டும் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டும் பணிவரன் முறை செய்து ஆணையிடப்படுகிறது.

> *"The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai bench of the Hon'ble High Court of Madras relating to recruitment to the post included in Combined Civil Services Examination – IV for the year 2018-2019 and 2019-2020"*

2. தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 32(எ) (1)-ன் படி இளநிலை உதவியாளராக பணிக்கு ஆஜரான 21.08.2020 முற்பகல் முதல் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். இவர் பவானி சாகர் அரசு அலுவலர் அடிப்படை பயிற்சியினை முடித்த பின்னரே இவரது தகுதிகாண் பருவம் முடிக்கப்படும்.

3. இவ்வாணையினை பெற்றுக் கொண்டமைக்கு ஏற்பளிப்பு செய்யவும்.

ஒம்/- ஆ.அருண்,
காவல் ஆணையர்,
திருச்சி மாநகரம்.

பெறுநர்
செல்வி. M. முத்துலெட்சுமி, இளநிலை உதவியாளர், மாநகர காவல் அலுவலகம், திருச்சி மாநகரம்.

நகல்: காவல்துறை தலைமை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை - 4.
நகல்: பி1 உதவியாளர் மற்றும் கே2 இளநிலை உதவியாளர்.
நகல்: மாநகர ஆணை புத்தகம்
உதிரிகள்- 2.

/உ.ந.உ.ப/

நிர்வாக அதிகாரி

Scanned with CamScanner